CAREERINDIA

**Code No. 04**

Total No. of Questions : 50 ] [ Total No. of Printed Pages : 4

**March, 2009**

# TAMIL

Time : 3 Hours 15 Minutes ] [ Max. Marks : 100

***மாணவர்கள் கவனிக்க :***

i) வினாக்களின் எண்களைச் சரியாக குறிப்பிடவும்.

ii) விடைகள் தெளிவாக இருத்தல் வேண்டும்.

iii) மதிப்பெண்களுக்கு ஏற்றவாறு விடையளிக்கவும்.

## பகுதி - I

ஒரு வரியளவில் விடை தருக : 10 × 1 = 10

1. ஆதி வேதத்தைத் தோற்றுவித்தவன் யார் ?
2. புகழுக்காக உயிர் கொடுப்பவர் யார் ?
3. ஒருவர்க்கு அணி எது ?
4. வாக்கினிலே எப்போது உண்மையொளி உண்டாகும் என்கிறார் பாரதியார் ?
5. பண்டைய தமிழகத்தின் எல்லைகளைக் கூறுக.
6. யாரால் என்றும் தனித்து வாழ முடியாது ?
7. மக்கள் கவிஞர் என்று பாராட்டப் பெற்றவர் யார் ?
8. அப்துல் கலாம் உயர்நிலைப் பள்ளிக் கல்வியை எங்கு எப்பள்ளியில் தொடர்ந்தார் ?
9. திப்பு சுல்தானின் ராணுவத்தில் இருந்த ராக்கெட் ஏவும் வீரர் அடங்கிய அணியின் பெயர் யாது ?
10. எஸ்.எல்.வி. திட்டம் வேறு எத்திட்டத்தைத் தொடங்கி வைத்தது ?

## பகுதி - II

அ. எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 4 × 2 = 8

11. திருத்தக்க தேவர் அருகதேவனின் சிறப்புக்களை எவ்வாறு பாடுகின்றார் ?
12. ‘பாம்பறியும் பாம்பின் கால்’ – பழமொழியை விளக்குக.
13. சிலப்பதிகாரம் – குறிப்பு வரைக.
14. கோக்கோதை நாட்டின் வளத்தை முத்தொள்ளாயிரப் பாடல் கொண்டு விளக்குக.
15. போட்டியில் வானம் எப்போது தோற்றது என்கிறார் அப்துல் ரகுமான் ?

[ Turn over

www.careerindia.com

CAREERINDIA



ஆ. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : $3 \times 2 = 6$

16. நம் நாட்டில் ஓய்வு நேரப் போக்கு எவ்வாறு உள்ளது என்கிறார் அறிஞர் அண்ணா ?

17. நம் நாட்டில் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களைப் பற்றி முன்னோர்கள் என்ன கூறி வந்தனர் ?

18. மோனை வடிவில் அமைந்த விடுகதையை விளக்குக.

19. பொதுவுடைமை தனி உடைமை பற்றிக் கவிஞர் எவ்வாறு விளக்குகிறார் ?

இ. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : $3 \times 2 = 6$

20. A.D.-யில் அப்துல்கலாமுக்கு கொடுத்த பணி யாது ?

21. சிவராம கிருஷ்ண நாயருக்கு ஏற்பட்ட விபத்து யாது ? அவரது கடமை உணர்வு எவ்வாறு வெளிப்பட்டது ?

22. அப்துல் கலாமின் பணி வாழ்க்கையில் இரண்டு முக்கியமான நாட்கள் யாவை ?

23. வளைகுடாப் போர் இந்தியப் பொதுமக்களிடையே எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியது ?

## பகுதி - III

அ. எவையேனும் **இரண்டிற்கு** இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : $2 \times 3 = 6$

24. ‘புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்’

25. ‘கடனறி மாந்தர் கைந்நீ கொடு’.

26. ‘தனந்தருங்கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா,
மனந்தரும்’.

ஆ. ஏதேனும் **ஒன்றிற்கு** இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : $1 \times 3 = 3$

27. ‘அறம் மறவற்க – அறமல்லது துணையில்லை
என்ற ஓம்படை கிளவிகள் ஒன்றாயினும்
சிலவாயினும் காணப்படும்’.

28. ‘குடும்பத்தில் குத்து விளக்கு, அணையாத ஒளி பெண்’.

www.careerindia.com

CAREERINDIA



இ. ஏதேனும் **ஒன்றிற்கு** இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 1 × 3 = 3

29. 'அன்பைக் கலக்காமல் தயாரிக்கப்படும்
ரொட்டி சுவைக்காது. அது கசக்கும். ஒரு
மனிதனின் பாதிப்பசியைத்தான் அது போக்கும்'.

30. ''காலத்தின் மணற்பரப்பில்
உன் காலடிச் சுவடுகளைப்
பதிக்க விரும்பினால்
உனது கால்களை
இழுத்து இழுத்து நடக்காதே''.

## பகுதி - IV

அ. எவையேனும் **மூன்றிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 3 × 5 = 15

31. நம் பாரத நாட்டின் சிறப்பியல்புகளாகக் கவிஞர் இமயபாரதி கூறும் கருத்துக்கள் யாவை ?
32. பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைவி கூறியதாக அமைந்த கபிலர் பாடலால் அறியப்படும் செய்தியை விளக்குக.
33. இம்மையிற் கண்டனவாகக் கன்னன் இயம்பின யாவை ?
34. நாட்டுப்புறப் பாடலில் உள்ள சுவையை 'அரும்பாவி தன் உசுரு' என்ற பாடல்வழி விளக்குக.

ஆ. எவையேனும் **இரண்டிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 2 × 5 = 10

35. அழிவில்லாத செல்வத்தைப் பெற வேண்டும் என்பதே மனித இயற்கை என்பதை மறைமலையடிகள் எங்ஙனம் விளக்குகின்றார் ?
36. வெற்றிலை என்ற பெயர் எவ்வாறு உண்டானது என்பதை விளக்குக.
37. கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் ஆகிய இருவரின் நட்பின் உயர்வைப் புலப்படுத்துக.

இ. எவையேனும் **இரண்டிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 2 × 5 = 10

38. கணக்கு வாத்தியார் இராமகிருஷ்ண ஐயருக்கும் அப்துல் கலாமுக்கும் இடையே நடந்த நிகழ்ச்சியினைக் கூறுக.
39. பாதுகாப்பு அமைச்சர் ஆர். வெங்கட்ராமனை அப்துல் கலாம் சந்தித்ததனால் ஏற்பட்ட பயனை விரித்துரைக்க.
40. 'அக்னி' ஏவுகணையை விண்ணில் செலுத்துவதை எதனால் கைவிட வேண்டி வந்தது ?

www.careerindia.com

CAREERINDIA



## பகுதி - V

அ. கீழ்க்காணும் பாடலின் பொருளை எழுதி, அணியை விளக்குக : 1 × 5 = 5

41. ‘பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்’.

ஆ. எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை தருக : 4 × 2 = 8

42. எதிர்ச்சொல் தருக :
    i) துன்பம் × ii) புண்ணியம் ×

43. வாக்கியத்தில் அமைக்க :
    i) நறுமணம் ii) அழியாச் செல்வம்

44. அடைப்பிற்குள் கேட்டுள்ளவாறு வாக்கியத்தை மாற்றி எழுதுக.
    i) நான் வந்தேன்
    ( எதிர் மறை வாக்கியமாக மாற்றுக )
    ii) கம்பர் இராமாயணத்தை இயற்றினால்
    ( செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக )

45. சேர்த்தெழுதுக :
    i) கருங்கல் + சுவர் ii) பின் + பகுதி

46. கீழ்க்காணும் தொடர்களைத் தூய தமிழில் எழுதுக :
    i) இந்த பார்க் பார்க்க பியூட்டிபுல்லா இருக்கு
    ii) உங்களோட ஹாபி என்ன ?

## பகுதி - VI

அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கட்டுரை வரைக : 1 × 5 = 5

47. தொலைக்காட்சி தொடர்களின் வளர்ச்சியும் மக்களின் பண்பாடும்.

48. நீவிர் விரும்பும் ஒரு இலக்கியம்.

ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் **ஒன்றிற்கு** விடை தருக : 1 × 5 = 5

49. நீர் சென்று வந்த சுற்றுலா பற்றி உனது நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

50. ‘உப்பிட்டவரை உள்ளளவும் நினை’ – என்ற பழமொழியை விளக்கி வாக்கியத்தில் அமைக்கவும்.

www.careerindia.com